## மாமன்றக் கூட்டம்

**கோப்பு எண் - ந.க.எண் ( 1250/2017/ எம்.சி. 8 )**

**நாள் - 23.02.2017 வியாழக்கிழமை காலை 11.00 மணி**

**தலைமை - மரு. க. விஜயகார்த்திகேயன், இ.ஆ.ப.,**
**ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி,**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**கலந்துகொண்டோர்- துணை ஆணையர்,**
**அனைத்து துறை தலைமைகள்,**
**அனைத்து மண்டல உதவி ஆணையர்கள்**

---

**பொருள் எண் 1**

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – அம்ரூத் ( AMRUT ) 2015–2016 திட்டம் - 8 மாநகராட்சி பகுதிகளில் குடிநீர் விநியோக வளர்ச்சி திட்டத்தில் 395.41 கோடி நிர்வாக அனுமதி பெறப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பணி மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டுதல் – தொடர்பாக.

பார்வை: TNUDF /Projects/Coimbatore 8 added areas WSIS நாள்.27.01.2017.

*********

பார்வையில் கண்டுள்ளபடி கோயம்புத்தூர் மாநகராட்சி அம்ரூத் (AMRUT) 2015–2016 திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோக வளர்ச்சி திட்டத்தில் துடியலூர், வெள்ளக்கிணறு, சரவணம்பட்டி, சின்னவேடம்பட்டி, விளாங்குறிச்சி, காளப்பட்டி, குனியமுத்தூர் மற்றும் குறிச்சி ஆகிய 8 மாநகராட்சி பகுதிகளில் 409.33 கோடியில் செயல்படுத்த நகராட்சி நிர்வாக ஆணையரகத்தால் அனுமதி வழங்கியதை தமிழ்நாடு நகர உட்கட்டமைப்பு நிதி சேவைகள் குழுமத்தின் (TNUIFSL) கடிதத்தில் நிதி சாத்தியமாக உள்ளதால் கீழ்கண்டவாறு சுட்டிகாட்டப்பட்டுள்ள நிபந்தனைகளை மன்ற அனுமதி கோரப்பட்டுள்ளது.

1. To take up the Water Supply Improvement Scheme in 8 added areas of Coimbatore Corporation under KfW assisted SMIF-TN-II-2 programme with the following means of finance and weighted average graded deposit & tariff structure.

**(i) Means of Finance:**

| Sl.No | Means of Finance | Amount ( Rs. in Crores) | Percentage |
|---|---|---|---|
| 1 | Loan from TNUDF under KFW assisted SMIF- TN- II-2 | 102.35 | 25.00% |
| 2 | Grant from PSGF under KFW assisted SMIF- TN- II- 2 | 56.49 | 13.80% |
| 3 | Government of India Grant under AMRUT (SAAP- I) | 130.48 | 31.88% |
| 4 | Government of Tamil Nadu Grant under AMRUT (SAAP-I) | 79.08 | 19.32% |
| 5 | ULB contribution | 40.93 | 10.00% |
| | **Total** | **409.33** | **100.00%** |

**(ii) Weighted Average Deposit & Tariff:**

| Plinth Area of Assessment in Sq.ft | Proposed Deposit (Rs.) | | | Proposed Tarffi (Rs.) | | |
|---|---|---|---|---|---|---|
| | Domestic | Non-Domestic | Industrial | Domestic | Non-Domestic | Industrial |
| <500 | 5,000 | 20,000 | 25,000 | 150 | 450 | 900 |
| 501-1200 | 11,000 | 25,000 | 30,000 | 200 | 600 | 1200 |
| 1201-2400 | 19,000 | 30,000 | 40,000 | 250 | 750 | 1500 |
| 2401 | 29,000* | 35,000* | 50,000* | 300* | 900* | 1800* |
| **Wt.Average** | **11,500** | **24,697** | **31,250** | **200** | **599** | **1201** |
| * This is the base rate for the plinth area of 2401 sq.ft. The deposit and tariff for plinth area above 2401 sq.ft. shall be increased in proportion to the increase in plinth area. | | | | | | |

2. To increase the amount of deposit at the rate of 10% every 5 years.
3. To increase the amount of tariff at the rate of 10% every 5 years.
4. To contribute an amount of Rs.40.93 Crores, equivalent to 10% of the project cost as own contribution during the construction period.

5. To meet the Interest During Construction (IDC) from the general funds of the Corporation.
6. To make up the deficit in the water supply account due to low level of existing deposit & tariff structure & very high O&M cost from the general funds of the Corporation during the implementation period of two years.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் மொத்தம் 100 வார்டுகளில், 60 வார்டுகளில் நீர்மானி பொருத்தப்பட்டுள்ளது. மீதம் உள்ள இணைக்கப்பட்ட 40 வார்டுகளில் நீர்மானி பொறுத்தப்படவில்லை. எனவே மேற்கண்ட முன்மொழியப்பட்ட குடிநீர் கட்டணம் (proposed tariff) மாநகராட்சியின் 60 வார்டுகளில் செயல்படுத்த வழிவகை இல்லை மற்றும் முன்மொழியப்பட்ட குடிநீர் வைப்புத்தொகையை (proposed deposit) 100 வார்டுகளிலும் மாநகராட்சி ஏற்றுக்கொள்ளப்படும்.

எனவே மேற்கண்ட நிபந்தனைகளை ஏற்று மன்ற அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.410/2015/ப.வ (பி)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 380 நாள் 23.02.2017**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி – பொதுமக்களிடமிருந்து வருடாந்திர கட்டண மற்றும் வைப்புத்தொகை பாதாள சாக்கடை திட்ட செயலாக்க துணை விதிகளை நடைமுறைப்படுத்த தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை- 600 005 அவர்கள் 21.12.2016 அன்று பொது அங்கீகாரம் மற்றும் நிபந்தனைகளுடன் வழஙகப்பட்டுள்ளது – தொடர்ந்து மாவட்ட அரசிதழில் அறிவிக்கை செய்ய (Gazette Notification) - மன்ற அனுமதி வேண்டுதல் – தொடர்பாக.

பார்வை தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை-600 005 அவர்களின் கடிதம் ந.க.எண்.4588/2016/பாசாதி 1 21.12.2016.

-------------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் பாதாள சாக்கடை திட்டம் தொடர்பாக இணைப்புதாரர்களிடமிருந்து கீழ்கண்டவாறு பாதாள சாக்கடை திட்டம் தொடர்பாக திருத்திய உயர்வு செய்த பராமரிப்பு கட்டணம் மற்றும் வைப்புத்தொகை பாதாள சாக்கடை திட்ட உபவிதிகளின் படி பொது அங்கீகாரம் (General Approval) தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை- 600005 அவர்களால் 21.12.2016 அன்று வழஙகப்பட்டதை தொடர்ந்து மாவட்ட அரசிதழில் (தமிழ் மற்றும் ஆஙகிலம்) அறிவிக்கை செய்ய (Gazette Notification) மன்ற அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**1.புதிய பாதாள சாக்கடை இணைப்புகளுக்கான கட்டண விபரம்**

**அ.குடியிருப்பு முறை**

| சொத்துவரி அடிப்படையில் நிர்ணயம் | வருடாந்திர கட்டணம் (ரூபாயில்) | வைப்புத்தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| ரூ. 500 வரை | 250/- | 3,000/- |
| ரூ. 501 - 1,000 | 3,200/- | 10,000/- |
| ரூ.1,001 - 5,000 | 8,000/- | 20,000/- |
| ரூ.5,001 - 10,000 | 16,500/- | 35,000/- |
| ரூ.10,001 - 25,000 | 25,000/- | 50,000/- |
| ரூ25,001 - 50,000 | 36,000/- | 75,000/- |
| ரூ.50,000க்கு மேல் | 50,000/- | 1,00,000/- |

**ஆ.குடியிருப்பல்லாத முறை**

| சொத்துவரி அடிப்படையில் நிர்ணயம் | வருடாந்திர கட்டணம் (ரூபாயில்) | வைப்புத்தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| ரூ.500 வரை | 500/- | 5,000/- |
| ரூ .501 - 1,000 | 5,000/- | 15,000/- |
| ரூ.1,001 - 5,000 | 10,000/- | 25,000/- |
| ரூ.5,001 - 10,000 | 20,000/- | 50,000/- |
| ரூ.10,001 - 25,000 | 35,000/- | 75,000/- |
| ரூ.25,001 - 50,000 | 50,000/- | 1,00,000/- |
| ரூ.50,000க்கு மேல் | 75,000/- | 1,25,000/- |

**இ.வணிக முறை**

| இனம் | வருடாந்திர கட்டணம் ரூபாயில் | வைப்புத் தொகை ரூபாயில் |
|---|---|---|
| படுக்கை வசதியுடன் கூடிய மருத்துவ மனைகள் | 50,000/- | 1,00,000/- |
| திரை அரங்கங்கள் | 50,000/- | 1,00,000/- |
| வணிக வளாகங்கள் (Shopping mall) | 1,00,000/- | 1,50,000/- |
| தங்கும் விடுதிகள் | 75,000/- | 1,00,000/- |
| சிற்றுண்டி உணவகங்கள் | 25,000/- | 40,000/- |
| உணவகங்கள் | 75,000/- | 1,25,000/- |
| கல்வி நிறுவனங்கள் | 75,000/- | 1,00,000/- |
| திருமண மண்டபங்கள் | 75,000/- | 1,25,000/- |

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம். ந.க.எண்.12069/2006/ப.வ.(பி)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 381 நாள் 23.02.2017**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 3

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதிகளில் அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | நிர்வாக அனுமதி பெறப்பட்ட நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் –79க்குட்பட்ட பொன்னையராஜபுரம், ராயப்பபுரம் மற்றும் லாலி ரோடு பகுதியில் உள்ள பொதுக்கழிப்பிடங்களுக்கு அபிவிருத்தி பணிகள் செய்தல்.<br><br>ந.க.எண்9535/2016/எம்டி4 | 5.00 | ம.தீ.எண் 138 11.11.16 | 09.12.16 முதலாம் அழைப்பு | 1).திருமதி.டி.ரோஸி 0.03ரூகுறைவு<br><br>2).திரு.பி.எ.தாமஸ் 0.65ரூஅதிகம் | திருமதி .டி.ரோஸி 0.03ரூ குறைவு |
| 2 | வார்டு எண் –79க்குட்பட்ட வேடப்பட்டி ரோடு மற்றும் வைத்தியர் ஆறுமுக உடையார் வீதி பகுதியில் உள்ள பொதுக் கழிப்பிடங்களுக்கு அபிவிருத்தி பணிகள் செய்தல்.<br>ந.க.எண்9536/2016/எம்டி4 | 5.00 | ம.தீ.எண் 138 11.11.16 | 09.12.16 முதலாம் அழைப்பு | 1).திருமதி.டி.ரோஸி 0.03ரூகுறைவு<br><br>2).திரு.பி.எ.தாமஸ் 0.65ரூஅதிகம் | திருமதி. டி.ரோஸி 0.03ரூ குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | வார்டு எண் –77க்குட்பட்ட சொக்கம்புதூர் (மயானம் அருகில்) பகுதியில் உள்ள பொதுக் கழிப்பிடத்திற்கு அபிவிருத்தி பணிகள் செய்தல். ந.க.எண்9537/2016/எம்டி4 | 5.00 | ம.தீ.எண் 138 11.11.16 | 09.12.16 முதலாம் அழைப்பு | 1).திருமதி.டி.ரோஸி 0.03ஶ்ரீகுறைவு<br><br>2).திரு.பி.எ.தாமஸ் 0.65ஶ்ரீஅதிகம் | திருமதி. டி.ரோஸி 0.03ஶ்ரீ குறைவு |
| 4 | வார்டு எண் –78க்குட்பட்ட நாடார் வீதி மற்றும் ஐ.யு.டி.பி காலனி பகுதியில் உள்ள பொதுக் கழிப்பிடங்களுக்கு அபிவிருத்தி பணிகள் செய்தல். ந.க.எண்9538/2016/எம்டி4 | 5.00 | ம.தீ.எண் 138 11.11.16 | 09.12.16 முதலாம் அழைப்பு | 1).திருமதி. டி.ரோஸி 0.03ஶ்ரீ குறைவு<br><br>2).திரு.பி.எ.தாமஸ் 0.65ஶ்ரீஅதிகம் | திருமதி. டி.ரோஸி 0.03ஶ்ரீ குறைவு |

மேற்படி, பட்டியலில் உள்ள இப்பணிகளின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:– அனுமதிக்கலாம் ந.க.எண்.9535/2016/எம்டி4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 382 நாள் 23.02.2017**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 4**

**பொருள்:** காந்திபுரம் உயர்மட்ட பாலம் – கோயம்புத்தூர் மாநகராட்சி – நெடுஞ்சாலைத் துறை மூலம் காந்திபுரம் பகுதியில் உயர்மட்ட மேம்பாலம் கட்டும் பணி நடைபெறுதல் – டாக்டர்.நஞ்சப்பா சாலையில் உள்ள நடைபாதை வியாபாரிகளுக்கு வாடகை அடிப்படையில் மாற்று இடம் வழங்குதல் – ஒப்புதல் வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைத்தல் – தொடர்பாக.

*******

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட காந்திபுரம் பகுதியில் நெடுஞ்சாலைத்துறை மூலம் இரண்டடுக்கு மேம்பாலம் கட்டும் பணிக்காகவும், மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற தீர்ப்பின் படியும், கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம், நகரளவு வார்டு எண்.K(11), பிளாக் எண்.**10**, நகரளவு எண்.**220**ல் உள்ள யார்டு சாலையின் இரு பக்கங்களிலும் வியாபாரம் செய்து கொள்ள மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டு வாடகை அடிப்படையில் வியாபாரம் செய்து கொள்ள ஒப்புதல் அளித்து மாமன்ற தீர்மானம் எண்.**329**, நாள்.**19.12.2014** நிறைவேற்றப்பட்டது. இவ்விடத்தில் இந்திய உணவுக் கழகத்திற்கு வந்து செல்லும் லாரிகள் நிறுத்தப்பட்டு வருவதால், தற்காலிகமாக எருக்கம்பனி பகுதியில் தேர்வு செய்யப்பட்ட மாற்று இடத்தில் லாரிகளை நிறுத்த அறிவிக்கப்பட்டது.

மேற்படி பொருள் தொடர்பாக லாரி உரிமையாளர்கள் சங்கம், உணவுக் கழகத்தின் அருகில் லாரிகள் நிறுத்தப்பட்டால்தான் அரசு மூலம் அனுப்பப்படும் அத்தியாவசியப் பொருள்களின் சேவை குறிப்பிட்ட காலத்திற்குள் ரேசன் கடைகளுக்கும் சேர்க்க இயலும் எனத் தெரிவித்து கடிதம் சமர்பித்துள்ளனர். ஆகவே, இதனைத் தொடர்ந்து நஞ்சப்பா சாலை நடைபாதை வியாபாரிகளுக்கு மாற்று இடம் ஆய்வு செய்யப்பட்டதில், வார்டு எண். K(11), பிளாக் எண்.**10** T.S.No.208/1, 209/2, பிளாக் எண்.**11** T.S.No.227/2, 229/2, 232/2, 230/2, பிளாக் எண்.**12** T.S.No.234/3, 233/2ல் டாடாபாத் மின்சார வாரிய அலுவலகத்திற்கு எதிரே உள்ள சாலைப்பகுதி போக்குவரத்திற்கு இடையூறின்றி குறைந்த வாகனங்களே செல்லக்கூடியவாறு உள்ளது. நடைபாதை மற்றும் கடை அமைக்க ஏதுவாக இடம் உள்ளது. எனவே மேற்படி இடத்தில் வாடகை அடிப்படையில் டாக்டர்.நஞ்சப்பா சாலையில் உள்ள நடைபாதை வியாபாரிகளுக்கு வியாபாரம் செய்து கொள்ள மாற்று இடமாக வழங்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:- ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.**9257/2014**/எம்.எச்.**5**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 383 நாள் 23.02.2017**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 5

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்குமண்டலம் வார்டு எண் 76,77,78 மற்றும் 79-க்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளும் பணிகளுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்,

| வ. எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 76 | வார்டு எண்.76, எல்.ஐ.சி காலனி பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல்<br>ந.க.எண்.: 1640 /2017/ எம்.டி 4 | 5.00 |
| 2 | 76 | வார்டு எண்.76, முத்துசாமி காலனி பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல்<br>ந.க.எண்.: 1641/2017/எம்.டி 4 | 5.00 |
| 3 | 76 | வார்டு எண்.76, தெலுங்குபாளையம் பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல்<br>ந.க.எண்.: 1642 /2017/ எம்.டி 4 | 5.00 |
| 4 | 76 | வார்டு எண்.76, தில்லை நகர் பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல்<br>ந.க.எண்.: 1643/2017/ எம்.டி 4 | 5.00 |
| 5 | 77 | வார்டு எண்.77, வடக்கு ஹவுசிங்யூனிட் பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல்<br>ந.க.எண்.: 1644 /2017/ எம்.டி 4 | 5.00 |
| 6 | 77 | வார்டு எண்.77, பாண்டியன் நகர் பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல்<br>ந.க.எண்.: 1645 /2017/ எம்.டி 4 | 5.00 |
| 7 | 77 | வார்டு எண்.77, சண்முகராஜபுரம் பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல்<br>ந.க.எண்.: 1646 /2017/ எம்.டி 4 | 5.00 |
| 8 | 78 | வார்டு எண்.78, ஐ.யூ.டி.பி காலனி பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல்<br>ந.க.எண்.: 1647/2017/ எம்.டி 4 | 5.00 |
| 9 | 79 | வார்டு எண்.79, சுப்பிரமணியபுரம் பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல்<br>ந.க.எண்.: 1648 /2017/ எம்.டி 4 | 5.00 |
| 10 | 79 | வார்டு எண்.79, ஏ.கே.எஸ் நகர் பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்தல்<br>ந.க.எண்.: 1649/2017/ எம்.டி 4 | 5.00 |
| 11 | 76 | வார்டு எண்.76, முத்துசாமி காலனி ஆழ்குழாய் கிணற்றுக்கு மோட்டார் சப்ளை செய்து பழுதடைந்த ஜி.ஐ.பைப்புகளை மாற்றி புதிய பைப்புகள் பொருத்துதல்.<br>ந.க.எண்.: 1629 /2017/ எம்.டி 4 | 0.99 |
| 12 | 76 | வார்டு எண்.76, எல்.ஐ.சி காலனி ஆழ்குழாய் கிணற்றுக்கு மோட்டார் சப்ளை செய்து பழுதடைந்த ஜி.ஐ.பைப்புகளை மாற்றி புதிய பைப்புகள் பொருத்துதல்.<br>ந.க.எண்.: 1628 /2017/ எம்.டி 4 | 0.99 |
| 13 | 76 | வார்டு எண்.76, தில்லை நகர் ஆழ்குழாய் கிணற்றுக்கு மோட்டார் சப்ளை செய்து பழுதடைந்த ஜி.ஐ.பைப்புகளை மாற்றி புதிய பைப்புகள் பொருத்துதல்.<br>ந.க.எண்.: 1630 /2017/ எம்.டி 4 | 0.99 |
| 14 | 76 | வார்டு எண்.76, தெலுங்குபாளையம் ஆழ்குழாய் கிணற்றுக்கு மோட்டார் சப்ளை செய்து பழுதடைந்த ஜி.ஐ.பைப்புகளை மாற்றி புதிய பைப்புகள் பொருத்துதல்.<br>ந.க.எண்.: 1631 /2017/ எம்.டி 4 | 0.99 |
| 15 | 76 | வார்டு எண்.76, சாஸ்தா நகர் ஆழ்குழாய் கிணற்றுக்கு மோட்டார் சப்ளை செய்து பழுதடைந்த ஜி.ஐ.பைப்புகளை மாற்றி புதிய பைப்புகள் பொருத்துதல்.<br>ந.க.எண்.: 1632/2017/ எம்.டி 4 | 0.99 |

| | | | |
|---|---|---|---|
| 16 | 77 | வார்டு எண்.77, பாண்டியன் நகர் ரிசர்வ் சைட் ஆழ்குழாய் கிணற்றுக்கு மோட்டார் சப்ளை செய்து பழுதடைந்த ஜி.ஐ.பைப்புகளை மாற்றி புதிய பைப்புகள் பொருத்துதல். ந.க.எண்.: 1633/2017/ எம்.டி 4 | 0.99 |
| 17 | 77 | வார்டு எண்.77, அருள் கார்டன் ஆழ்குழாய் கிணற்றுக்கு மோட்டார் சப்ளை செய்து பழுதடைந்த ஜி.ஐ.பைப்புகளை மாற்றி புதிய பைப்புகள் பொருத்துதல். ந.க.எண்.: 1634 /2017/ எம்.டி 4 | 0.99 |
| 18 | 77 | வார்டு எண்.77, சண்முகராஜபுரம் ஆழ்குழாய் கிணற்றுக்கு மோட்டார் சப்ளை செய்து பழுதடைந்த ஜி.ஐ.பைப்புகளை மாற்றி புதிய பைப்புகள் பொருத்துதல். ந.க.எண்.: 1635 /2017/ எம்.டி 4 | 0.99 |
| 19 | 77 | வார்டு எண்.77, வடக்கு ஹவுசிங்யூனிட் 60அடி ரோடு ஆழ்குழாய் கிணற்றுக்கு மோட்டார் சப்ளை செய்து பழுதடைந்த ஜி.ஐ.பைப்புகளை மாற்றி புதிய பைப்புகள் பொருத்துதல் ந.க.எண்.: 1636 /2017/ எம்.டி 4 | 0.99 |
| 20 | 78 | வார்டு எண்.78, வடக்கு ஹவுசிங்யூனிட் ஆழ்குழாய் கிணற்றுக்கு மோட்டார் சப்ளை செய்து பழுதடைந்த ஜி.ஐ.பைப்புகளை மாற்றி புதிய பைப்புகள் பொருத்துதல். ந.க.எண்.: 1637 /2017/ எம்.டி 4 | 0.99 |
| 21 | 78 | வார்டு எண்.78, நாடார் வீதி ஆழ்குழாய் கிணற்றுக்கு மோட்டார் சப்ளை செய்து பழுதடைந்த ஜி.ஐ.பைப்புகளை மாற்றி புதிய பைப்புகள் பொருத்துதல். ந.க.எண்.: 1638/2017/ எம்.டி 4 | 0.99 |
| 22 | 79 | வார்டு எண்.79, பொன்னையராஜபுரம் ஆழ்குழாய் கிணற்றுக்கு மோட்டார் சப்ளை செய்து பழுதடைந்த ஜி.ஐ.பைப்புகளை மாற்றி புதிய பைப்புகள் பொருத்துதல். ந.க.எண்.: 1639 /2017/ எம்.டி 4 | 0.99 |

மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி ஒப்புதலுக்கு் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் ந.க. எண். 1640/2017/எம்.டி.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 384 நாள் 23.02.2017</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 6

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் 32, 35, மற்றும் 36-க்கு உட்பட்ட பகுதியில் கீழ்க்கண்ட அபிவிருத்தி பணிகளுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | ந.க.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|---|
| 1 | 968/2017/எம்டி3 | வார்டு எண் 32- க்குட்பட்ட சேரன் மாநகர் பகுதியில் உள்ள மழை நீர் வடிகாலில் தூர் எடுத்தல். | 9,50,000/- |
| 2 | 836/2017/எம்டி3 | வார்டு எண் 35-க்குட்பட்ட ஆர் ஜி. புதூர் பள்ளிக்கு கூடுதல் மற்றும் அபிவிருத்தி பணிகள் செய்தல். | 5,95,000/- |
| 3 | 674/2017/எம்டி3 | வார்டு எண் 36-க்குட்பட்ட காளப்பட்டி பிரிவு அலுவலகத்தில் பராமரிப்பு பணிகள் செய்தல். | 5,00,000/- |

மேற்காண் பட்டியலில் உள்ள பணிகளுக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.968 /2017/எம்டி3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 385 நாள் 23.02.2017</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 7

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் குடிநீர் விநியோகப் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளும் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ எண் | ந.க.எண் | **பணியி**ன் பெயர் | மதிப்பீடு (ரூபாய் ) |
|---|---|---|---|
| 1 | 514/2017/எம்.டி.2 | பாரதி பூங்கா வளாகத்திலுள்ள கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டியில் 50 குதிரை திறன் கொண்ட நீர் உந்தி மோட்டார் பொருத்துதல் மற்றும் நீர்உந்து குழாய் அமைத்து இணைப்பு வேலைகள் செய்தல். | 46,70,000/- |
| 2 | 517/2017/எம்.டி.2 | வார்டு எண் 12க்குட்பட்ட என்.எஸ்.ஆர் சாலையிலிருந்து மணியம் வேலப்பர் வீதி வழியாக காளியப்பன் வீதி வரை குடிநீர் பிரதான குழாய் பதித்தல். | 19,80,000/- |
| 3 | 516/2017/எம்.டி.2 | மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் HDPE தொட்டிகள் அமைத்து குடிநீர் விநியோகம் செய்தல். | 9,60,000/ |
| 4 | 515/2017/எம்.டி.2 | வார்டு எண் 44க்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் திருகு அடைப்பான் தொட்டி கட்டுதல். | 4,90,000/ |
| 5 | 484/2017/எம்.டி.2 | மேற்கு மண்டலத்திற்குட்பட்ட HLR குடிநீர் பிரிவிற்கு திருகு அடைப்பான் மற்றும் உபகரணங்கள் வழங்கி பொருத்துதல். | 5,00,000/ |

அலுவலககுறிப்பு:அனுமதிக்கலாம் ந.க.எண்.514/2017/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 386 நாள் 23.02.2017**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 8

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் குடிநீர் விநியோகம் HLR மேல் நிலை நீர் தேக்க தொட்டிகளுக்கு மோட்டார் இயந்திரம் மற்றும் உபகரணங்கள் நிறுவுதல் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ எண் | ந.க.எண் | **பணியி**ன் பெயர் | மதிப்பீடு (ரூபாய் ) |
|---|---|---|---|
| 1 | 217/2017/எம்.டி.5/ ம | மத்திய மண்டலத்திற்குட்பட்ட ஆர்.ஜி நகர் குடிநீர் கீழ்நிலைத் தொட்டிக்கு கூடுதலாக 50HP நீர் மூழ்கி மோட்டார் வழஙகுதல் | 5,00,000/- |
| 2 | 221/2017/எம்.டி.5/ ம | மத்திய மண்டலத்திற்குட்பட்ட கண்ணப்பன் நகர் பகுதியில் மோட்டாருக்கு Starter வழஙகுதல் | 9,00,000/- |
| 3 | 758/2017/எம்.டி.2/ மே | மேற்கு மண்டலம் HLR கீழ்நிலை நீர்த் தேக்க தொட்டி (GSLR)யில் 50HP மோட்டார் பொருத்துதல் மற்றும் லாரி குடிநீர் விநியோகத்திற்கு மோட்டார் உந்தி வசதி செய்தல். | 32,00,000/ |

அலுவலககுறிப்பு:அனுமதிக்கலாம் ந.க.எண்.217/2017/எம்.டி5 /ம

**மாநகர மன்ற தீர்மானம் எண் 387 நாள் 23.02.2017**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 9**

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் குடிநீர் விநியோகம்- HLR மேல் நிலை நீர் தேக்க தொட்டிகளுக்கு மோட்டார் இயந்திரம் மற்றும் உபகரணங்கள் நிறுவுதல் பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ எண் | ந.க.எண் | **பணியி**ன் பெயர் | மதிப்பீடு (ரூபாய் ) |
|---|---|---|---|
| 1 | 218/2017/எம்.டி.2/ மே | மேற்கு மண்டலம் HLR குடிநீர் பிரிவில் உள்ள ஜெனரேட்டர் பழுது பார்த்தல் – வார்டு எண் 22 | 9,97,000/- |
| 2 | 219/2017/எம்.டி.2/ மே | மேற்கு மண்டலம் HLR குடிநீர் பிரிவிற்குட்பட்ட திருகு அடைப்பான்களின் வெண்கல கம்பி புதியதாக மாற்றி அமைத்தல். வார்டு எண் 10, 11, 12, 13, 14, 22, 23 | 5,00,000/- |
| 3 | 220/2017/எம்.டி.2/ மே | மேற்கு மண்டலம் நடராஜ் லேஅவுட் கீழ்நிலைத் தொட்டிக்கு 50HP நீர்மூழ்கி மோட்டார் பொருத்துதல். வார்டு எண் 12 | 5,00,000/ |
| 4 | 222/2017/எம்.டி.2/ மே | வடக்கு மண்டலம் ஜெய்நகர் கீழ்நிலைத் தொட்டிக்கு 50HP நீர்மூழ்கி மோட்டார் பொருத்துதல். வார்டு எண் 44 | 5,00,000/ |
| 5 | 223/2017/எம்.டி.2/ மே | மேற்கு மண்டலம் HLR கீழ்நிலைத் தொட்டிக்கு 50HPநீர் மூழ்கி மோட்டார் பொருத்துதல். வார்டு எண் 22 | 5,00,000/ |

அலுவலககுறிப்பு:அனுமதிக்கலாம் ந.க.எண்.218/2017/எம்.டி.2/மே

**மாநகர மன்ற தீர்மானம் எண் 388 நாள் 23.02.2017**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 10**

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலப் பகுதிகளில் அபிவிருத்தி பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோர நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | ந.க.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|---|
| 1 | 011481/2016/எம்.டி.2 | வார்டு எண். 55 க்குப்பட்ட பாரதியார் ரோடு, ரொட்டிகடைவீதி மற்றும் எல்.எம்.எஸ் வீதி பகுதியில் பாதாள சாக்கடை சேம்பர்கள் உயர்த்தி கட்டுதல் மற்றும் திரும்ப கட்டுதல் மற்றும் புதிதாக கட்டுதல் | 6,50,000/- |

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 011481/2016/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 389 நாள் 23.02.2017**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 11**

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலப் பகுதிகளில் அபிவிருத்தி பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோர நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | ந.க.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|---|
| 2 | 010888/2016/எம்.டி.2 | வார்டு எண்.55-க்குட்பட்ட ஆழ்குழாய் கிணறுகளை இயக்கி பராமரித்தல் பணிக்கு (7 மாதங்கள்) | 4,60,000/- |
| 3 | 010009/2016/எம்.டி.2 | வார்டு எண் 55 க்குட்பட்ட தண்டபாணி வீதியில் ஆழ்குழாய் கிணறு மற்றும் கிணற்று நீர் பகிர்மான குழாய் அமைத்தல் பணிக்கு | 7,50,000/- |

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 010888/2016/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 390 நாள் 23.02.2017**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 12

| பொருள்- | கோயம்புத்தூா் மாநகராட்சி – தெற்கு மண்டலம் - 2017-18 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர குத்தகை இனங்களுக்கு பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 19.01.2017 ல் ஏலம் நடைபெற்றது - இதில் ஏலம் உறுதி செய்யப்பட்ட ஒரு இனத்திற்கு உரிமம் செய்யப்பட்டது – தொடா்பாக |
|---|---|
| பாா்வை - | ஆணையா் அவா்களின் உத்திரவு நாள் 25.01.2017 |

கோயம்புத்தூா் மாநகராட்சி தெற்கு மண்டலம் 2017-18 ம் ஆண்டிற்கான வருடாந்திர குத்தகை இனங்களுக்கு பொது மின்ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 19.01.2017 ல் ஏலம் நடைபெற்றது. இதில் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள ஒரு இனத்திற்கு மட்டும் ஏல வைப்புத் தொகை செலுத்தி ஏலத்தில் கலந்து கொண்டனா். இதில் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு ஏலத்தொகை பெறப்பட்டுள்ளது.

**சின்ன சுடுகாடு கட்டண கழிப்பிடம் ,**

| வ.எண் | ஏலதாரா் பெயா் | ஏலத்தொகை | அரசு மதிப்பு ரூ. |
|---|---|---|---|
| 1 | எம். அன்புராஜ் | 1,20,806- | 1,00,000- |
| 2 | கே. கணேஷ்குமாா் | 1,17,000- | |

மேற்படி ஏலதாரா் எம். அன்புராஜ் என்பவா் உயா்ந்தபட்சமாக ரூ.1,20,000- க்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளாா். இத்தொகை அரசு மதிப்பினைக் காட்டிலும் கூடுதலாக உள்ளது. எனவே மேற்படி இனத்திற்கு அரசு மதிப்பைக் காட்டிலும் கூடுதலாக பெறப்பட்டுள்ள ஏலத்தொகையின் அடிப்படையில் திரு. எம். அன்புராஜ் என்பவருக்கு ஒதுக்கீடு செய்ய மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் 220/2017/அ1 (தெ)

**மாநகர மன்ற தீா்மானம் எண் 391 நாள் 23.02.2017**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 13

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் பொறியியல் பிரிவு வாா்டு எண் 38 மற்றும் 39ல் உள்ள கீழ்கண்ட ஆழ்குழாய் கிணற்று மோட்டாா் இயக்கி பராமரித்தல் மற்றும் மருத்துவமனை கட்டிடம் மராமத்து பணிகளுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை உடனடியாக செய்து முடிக்க ஆணையா் அவா்கள் உத்திரவிட்டதை தொடா்ந்து இம்மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வாா்டு எண் | பணிகளின் பெயா் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| **1** | 38 | வாா்டுப் பகுதியில் ஆழ்குழாய் கிணற்று மோட்டாா் இயக்கி பராமரித்தல் பணி (ந.க.எண்: 001510/2017/MD2). | 6.00 |
| **2** | 39 | வாா்டுப் பகுதியில் ஆழ்குழாய் கிணற்று மோட்டாா் இயக்கி பராமரித்தல் பணி (ந.க.எண்: 001511/2017/MD2). | 6.50 |
| 3 | 39 | முருகன் நகரில் உள்ள மருத்துவமனை கட்டிடத்திற்கு மராமத்து பணிகள் செய்தல். (ந.க.எண்:00928/2017/MD2). | 27.00 |

மேற்கண்டபணிகளுக்கு மன்றத்தின் நிா்வாக அனுமதி வேண்டி ஆணையா் மற்றும் தனிஅதிகாரி அவா்களின் ஒப்புதலுக்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 001510/2017/MD2

**மாநகர மன்ற தீா்மானம் எண் 392 நாள் 23.02.2017**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 14

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் பொறியியல் பிரிவு வார்டு எண் 41,44,46 மற்றும் 47 ல் உள்ள கீழ்கண்ட ஆழ்குழாய் கிணறு மற்றும் விநியோக குழாய் பதித்தல் தார் தளம் புதுபித்தல் மற்றும் அம்மா உணவகத்திற்கு பாதுகாவலர் வழங்குதல் பணிக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை உடனடியாக செய்து முடிக்க ஆணையர் அவர்கள் உத்திரவிட்டதை தொடர்ந்து இம்மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | வார்டு எண் | பணிகளின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 41 | மணியகாரன்பாளையம் அம்மா உணவகத்திற்கு பாதுகாவலர் வழங்குதல் பணி செய்தல். (ந.க.எண்: 11850/2016/D1). | 4.10 |
| 2 | 41 | கே.ஆர்.ஜி நகர் குறுக்கு சாலை, வெற்றிவிநாயகர் நகர் விரிவாக்கப்பகுதி மற்றும் கணபதி மாநகர் 2வது பிளாக் பகுதிகளில் ஆழ்குழாய் கிணற்றுநீர் விநியோக குழாய் பதித்தல். (ந.க.எண்:11852/2016/MD2). | 7.00 |
| 3 | 41 | அலமேலுமங்காபுரம் குறுக்கு சாலைகள், ஸ்ரீதேவி நகர், நேரு நகர் (சி.எம்.எஸ் பள்ளி பின்புறம்) மற்றும் அசிசி நகர் பகுதிகளில் ஆழ்குழாய் கிணற்றுநீர் விநியோக குழாய் பதித்தல். (ந.க.எண்:11853/2016/MD2). | 6.20 |
| 4 | 41 | காந்திமாநகர் மற்றும் கணபதி மாநகர் பகுதிகளில் ஆழ்குழாய் கிணற்றுநீர் விநியோக குழாய் பதித்தல். (ந.க.எண்:01255/2017/MD2). | 10.00 |
| 5 | 41 | வார்டுப் பகுதியில் ஆழ்குழாய் கிணற்று மோட்டார் இயக்கி பராமரித்தல் பணி (ந.க.எண்: 001513/2017/MD2). | 8.70 |
| 6 | 41 | வெங்கடேசபுரம் பகுதியில் உள்ள குறுக்கு சாலைகளில் தார் தளம் புதுபித்தல் பணி | 12.00 |
| 7 | 44 | வார்டுப் பகுதியில் ஆழ்குழாய் கிணற்று மோட்டார் இயக்கி பராமரித்தல் பணி (ந.க.எண்:01256/2017/MD2). | 7.65 |
| 8 | 44 | ரயில்வே மென்ஸ் காலனி பகுதியில் ஆழ்குழாய் கிணற்றுநீர் விநியோக குழாய் பதித்தல். (ந.க.எண்:01584/2017/MD2). | 7.90 |
| 9 | 46 | வார்டுப் பகுதியில் ஆழ்குழாய் கிணற்று மோட்டார் இயக்கி பராமரித்தல் பணி (ந.க.எண்:001512/2017/MD2). | 5.30 |
| 10 | 47 | வார்டுப் பகுதியில் ஆழ்குழாய் கிணற்று மோட்டார் இயக்கி பராமரித்தல் பணி (ந.க.எண்:001515/2017/MD2). | 7.80 |

மேற்கண்ட பணிகளுக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி ஆணையர் மற்றும் தனிஅதிகாரி அவர்களின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 11850/2016/MD2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 393 நாள் 23.02.2017**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 15

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்குமண்டலம் வார்டு எண் 77 மற்றும் 78-க்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளும் பணிகளுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்

| வ. எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 77 | வார்டு எண்.77, சொக்கம்புதூர் பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்து கிணற்று நீர் குழாய்கள் பதித்தல் ந.க.எண்.: 1650 /2017/ எம்.டி 4 | 10.00 |
| 2 | 78 | வார்டு எண்.78, வடக்கு ஹவுசிங் யூனிட் பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்து கிணற்று நீர் குழாய்கள் பதித்தல் ந.க.எண்.: 1651/2017/ எம்.டி 4 | 10.00 |

மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் ந.க.எண்.: 1650 /2017/ எம்.டி 4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 394 நாள் 23.02.2017**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 16

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்குமண்டலம் வார்டு எண் 76,77,78 மற்றும் 79-க்கு உட்பட்ட பகுதியில் உள்ள கீழ்க்கண்ட பொதுக்கழிப்பிடங்களை அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை உடனடியாக செய்து முடிக்க ஆணையாளர் அவர்கள் உத்திரவிட்டதைத் தொடர்ந்து இம்மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்,

| வ.எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 76 | வார்டு எண் 76க்குட்பட்ட பகுதிகளிலுள்ள ஆழ்குழாய் கிணறுகள் ஆறு மாத காலத்திற்கு இயக்கி பராமரித்தல்.<br>ந.க.எண்.: 10121/16/டி1(தெ) | 4.95 |
| 2 | 77 | வார்டு எண் 77க்குட்பட்ட பகுதிகளிலுள்ள ஆழ்குழாய் கிணறுகள் ஆறு மாத காலத்திற்கு இயக்கி பராமரித்தல்.<br>ந.க.எண்.: 10122 /16/டி1(தெ) | 4.80 |
| 3 | 78 | வார்டு எண் 78க்குட்பட்ட பகுதிகளிலுள்ள ஆழ்குழாய் கிணறுகள் பதினொரு மாத காலத்திற்கு இயக்கி பராமரித்தல்.<br>ந.க.எண்.: 10123/16/டி1(தெ) | 5.00 |
| 4 | 79 | வார்டு எண் 79க்குட்பட்ட பகுதிகளிலுள்ள ஆழ்குழாய் கிணறுகள் பத்து மாத காலத்திற்கு இயக்கி பராமரித்தல்.<br>ந.க.எண்.: 10124/16/டி1(தெ) | 5.00 |

மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி ஒப்புதலுக்கு் வைக்கப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் ந.க.எண்: 10121 /2016/டி1தெ

**மாநகர மன்ற தீர்மானம் எண் 395 நாள் 23.02.2017**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 17

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட 20 வார்டு பகுதியில் பொது சுகாதார பணிக்கு தேவையான, கிருமிநாசினி வழங்குதல் பணிக்கு மதிப்பீடு ரூ.5,00,000 க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 1212/2017/டி2(கி)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 396 நாள் 23.02.2017**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 18

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண் 25,81, 83, 84 க்கு உட்பட்ட பகுதியில் போதிய மழை இல்லாதால் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்துள்ள காரணத்தினால் பல ஆழ்குழாய் கிணறுகள் வறட்சி அடைந்து உள்ளன. இந்நிலையில் சிறுவாணி குடிநீர் விநியோகப் பற்றாக்குறை மற்றும் அதிகமான மக்கள்தொகை அடர்த்தி ஆகியவற்றின காரணங்களால் நீர் தேவை அதிகரித்துள்ளது. எனவே இந்நீர் தேவையினை சீர் செய்யும் பொருட்டு சில இடங்களில் ஆழ்துளை கிணறுகளை புதிதாக அமைக்க வேண்டியும் சில இடங்களில் புதிய ஆழ்துளை கிணறுகளை ஆழப்படுத்தவும் வேண்டியுள்ளது. ஏனவே அப்பணிகளை மேற்கொள்வதற்காக கீழ்கண்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூபாய்(இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 25 | வார்டு எண் 25க்குட்பட்டமேட்டுப்பாளையம் பிரதான சாலை் பகுதியில் ஆழ்துளை கிணறு மற்றும் கிணற்றுநீர் வினியோக குழாய் அமைத்தல் ந.க.எண்:- 832 /2017/எம்டி5 | 4,90,000/- |
| 2 | 25 | வார்டு எண் 25க்குட்பட்ட சிரியன் சர்ச் மற்றும் தியாகராய புது வீதி பகுதியில் ஆழ்துளை கிணறு ஆழப்படுத்துதல் மற்றும் கிணற்று நீர் வினியோக குழாய் அமைத்தல் ந.க.எண்:- 830 /2017/எம்டி5 | 4,50,000/- |
| 3 | 25 | வார்டு எண் 25க்குட்பட்ட சண்முகா தியேட்டர் ரோடு பகுதியில் ஆழ்துளை கிணறு மற்றும் கிணற்றுநீர் வினியோக குழாய் அமைத்தல் ந.க.எண்:- 831 /2017/எம்டி5 | 4,60,000/- |
| 4 | 81 | வார்டு எண் 81க்குட்பட்ட அய்யண்ணன் வீதி பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்தல் மற்றும் கிணற்றுநீர் வினியோக குழாய் அமைத்தல் ந.க.எண்:- 833 /2017/எம்டி5 | 4,90,000/- |
| 5 | 81 | வார்டு எண் 81க்குட்பட்ட ஜமேதார்வீதி பகுதியில் ஆழ்துளை கிணறு மற்றும் கிணற்றுநீர் வினியோக குழாய் அமைத்தல் ந.க.எண்:- 834 /2017/எம்டி5 | 4,65,000/- |
| 6 | 81 | வார்டு எண் 81க்குட்பட்ட ஒப்பணக்கார வீதி பகுதியில் ஆழ்துளை கிணறு மற்றும் கிணற்றுநீர் வினியோக குழாய் அமைத்தல் ந.க.எண்:- 839 /2017/எம்டி5 | 4,60,000/- |
| 7 | 83 | வார்டு எண் 83க்குட்பட்ட பவளம் பகுதியில் ஆழ்துளை கிணறு மற்றும் கிணற்றுநீர் வினியோக குழாய் அமைத்தல் ந.க.எண்:- 836 /2017/எம்டி5 | 4,65,000/- |
| 8 | 83 | வார்டு எண் 83க்குட்பட்ட தாமஸ் வீதி பகுதியில் ஆழ்துளை கிணறு மற்றும் கிணற்றுநீர் வினியோக குழாய் அமைத்தல் ந.க.எண்:- 835 /2017/எம்டி5 | 4,85,000/- |
| 9 | 84 | வார்டு எண் 84க்குட்பட்ட தர்மராஜா கோவில் வீதி பகுதியில் ஆழ்துளை கிணறு மற்றும் கிணற்றுநீர் வினியோக குழாய் அமைத்தல் ந.க.எண்:- 838 /2017/எம்டி5 | 4,85,000/- |
| 10 | 84 | வார்டு எண் 84க்குட்பட்டஅய்யாசாமி வீதி பகுதியில் ஆழ்துளை கிணறு மற்றும் கிணற்றுநீர் வினியோக குழாய் அமைத்தல் ந.க.எண்:- 837 /2017/எம்டி5 | 4,65,000/- |

எனவே மேற்கண்ட பணிகளுக்கு நடப்பாண்டு திருத்திய வரவு செலவு திட்டத்தில் ஏற்கனவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே இப்பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- அனுமதிக்கலாம் ந.க.எண்:- 830 /2017/எம்டி5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 397 நாள் 23.02.2017**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண் 19**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்குமண்டலம் வார்டு எண் 76,77,78 மற்றும் 79-க்கு உட்பட்ட பகுதியில் உள்ள செயலிழந்த ஆழ்குழாய் கிணறுகளுக்கு மீள்நிரப்பு தண்டுகள் அமைத்தல் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்.

| வ.எண் | வார்டு எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 76,77,78 மற்றும் 79 | வார்டு எண் 76,77,78 மற்றும் 79-க்கு உட்பட்ட பகுதியில் உள்ள செயலிழந்த ஆழ்குழாய் கிணறுகளுக்கு மீள்நிரப்பு தண்டுகள் அமைத்தல். ந.க.எண். 10116 /16/ டி1 தெ | 2.50 |

மேற்படி பணிகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் ந.க.எண்: 10116 /2016/டி1தெ

**மாநகர மன்ற தீர்மானம் எண் 398 நாள் 23.02.2017**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 20**

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம் கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட 20 வார்டு பகுதியில் பொது சுகாதார துப்புரவு பிரிவுகளுக்கு துப்புரவு தளவாடங்கள் வழங்குதல் பணிக்கு மதிப்பீடு ரூ.5,00,000 க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 1211 /2017/டி2(கி)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 399 நாள் 23.02.2017**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 21**

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண் 15,16,17,18,19,20 மற்றும் 21 க்குட்பட்ட வடவள்ளி பகுதியில் குடிநீர் குழாய் அமைத்தல் மற்றும் சரிசெய்தல் பணி மேற்கொள்ளுதல் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | ந.க.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 1672/2016/DIW | வார்டு எண்.16,17, மற்றும் 19 க்குட்பட்ட விடுபட்ட பகுதியில் தண்ணீர் குழாய் அமைத்தல் | 9.90 இலட்சம் |
| 2 | 1671/2016/DIW | வடவள்ளி மற்றும் P.Nபுதூர் பகுதியில் குடிநீர் விநியோகம் செய்ய HDPE தொட்டி அமைத்தல். | 9.60 இலட்சம் |
| 3 | 1670/2016/DIW | வார்டு எண்.15,20 மற்றும் 21 -க்குட்பட்ட பகுதியில் ஐந்து மாதத்திற்கு உடைந்த தண்ணீர் குழாய் நீர் கசிவு குழாய் சரி செய்தல் வால்வுகள் திருகுதல் மற்றும் பராமரித்தல். | 10.00 இலட்சம் |
| 4 | 1669/2016/DIW | வார்டு எண்.18 மற்றும் 19 -க்குட்பட்ட பகுதியில் ஐந்து மாதத்திற்கு உடைந்த தண்ணீர் குழாய் நீர் கசிவு குழாய் சரி செய்தல் வால்வுகள் திருகுதல் மற்றும் பராமரித்தல். | 10.00 இலட்சம் |
| 5 | 1668/2016/DIW | வார்டு எண்.16 மற்றும் 17 -க்குட்பட்ட பகுதியில் ஐந்து மாதத்திற்கு உடைந்த தண்ணீர் குழாய் நீர் கசிவு குழாய் சரி செய்தல் வால்வுகள் திருகுதல் மற்றும் பராமரித்தல். | 10.00 இலட்சம் |

இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.1672/2016/DIW

**மாநகர மன்ற தீர்மானம் எண் 400 நாள் 23.02.2017**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 22

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் மடத்தூர் பகுதியில் உள்ள OHT வளாகத்திற்குள் புதிதாக கூடுதல் கடமை அறை கட்டுதல் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | ந.க.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 1667/2016/DIW | கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் மடத்தூர் பகுதியில் உள்ள OHT வளாகத்திற்குள் புதிதாக கூடுதல் கடமை அறை (Duty Room) கட்டுதல் | 7.00 இலட்சம் |

இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.1666/2016/DIW

**மாநகர மன்ற தீர்மானம் எண் 401 நாள் 23.02.2017**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 23

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் வடவள்ளி பகுதியில் அண்ணா நகர் மற்றும் பொங்காலியூர் பகுதியில் கீழ்மட்ட தொட்டிக்கு கே.வி திட்டத்தில் தொண்டாமுத்தூர் பிரதான சாலையில் நீர்குழாய் அமைத்தல் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | ந.க.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 1667/2016/DIW | கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் வடவள்ளி பகுதியில் அண்ணா நகர் மற்றும் பொங்காலியூர் பகுதியில் கீழ்மட்ட தொட்டிக்கு கே.வி திட்டத்தில் தொண்டாமுத்தூர் பிரதான சாலையில் நீர்குழாய் அமைத்தல் | 29.70 இலட்சம் |

இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.1667/2016/DIW

**மாநகர மன்ற தீர்மானம் எண் 402 நாள் 23.02.2017**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 24

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்கள் 5,6,7,8 மற்றும் 9 க்குட்பட்ட பகுதியில் கழிப்பிடஙகளுக்கு திசைகாட்டி அறிவிப்புப்பலகை அமைத்தல் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | ந.க.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 1665/2016/DIW | கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண்கள் 5,6,7,8 மற்றும் 9 க்குட்பட்ட பகுதியில் கழிப்பிடஙகளுக்கு திசைகாட்டி அறிவிப்புப்பலகை அமைத்தல். | 7.25 இலட்சம் |

இப்பணிக்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.1665/2016/DIW

**மாநகர மன்ற தீர்மானம் எண் 403 நாள் 23.02.2017**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 25

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண் -56,57,58 மற்றும் 62 க்குட்பட்ட ஆழ்குழாய் கிணறுகளை இயக்கி ஒருவருட காலத்திற்கு பராமரித்தல் மற்றும் ஆழ்குழாய் கிணறு அமைத்தல் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் குடிநீர் 10 முதல் 12 நாள்களுக்கு ஒரு முறை மாநகராட்சி மூலம் வழுங்கப்பட்டு வருகின்றது. எனவே இப்பகுதி மக்களுக்கு கிணற்று நீர் வழங்க வேண்டியது அவசியமாகிறது. எனவே இம்மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே கீழ்கண்ட பணிகளுக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | பணிகளின் பெயர் | மதிப்பீடு ( ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 56 | வார்டு எண் - 56 க்குட்பட்ட ஆழ்குழாய் கிணறுகளை இயக்கி ஒருவருட காலத்திற்கு பராமரித்தல் பணி ந.க.எண்.- 1443/2017/MD3(E) | 5.00 |
| 2 | 56 | வார்டு எண் - 56 க்குட்பட்ட ஆழ்குழாய் கிணறுகளை இயக்கி ஒருவருட காலத்திற்கு பராமரித்தல் பணி ந.க.எண்.- 1442 /2017/MD3(E) | 5.00 |
| 3 | 57 | வார்டு எண் - 57 க்குட்பட்ட ஆழ்குழாய் கிணறுகளை இயக்கி ஒருவருட காலத்திற்கு பராமரித்தல் பணி ந.க.எண்.- 1441/2017/MD3(E) | 5.00 |
| 4 | 57 | வார்டு எண் - 57 க்குட்பட்ட ஆழ்குழாய் கிணறுகளை இயக்கி ஒருவருட காலத்திற்கு பராமரித்தல் பணி ந.க.எண்.- 1440/2017/MD3(E) | 3.25 |
| 5 | 58 | வார்டு எண் - 58 க்குட்பட்ட ஆழ்குழாய் கிணறுகளை இயக்கி ஒருவருட காலத்திற்கு பராமரித்தல் பணி ந.க.எண்.- 1439/2017/MD3(E) | 5.00 |
| 6 | 58 | வார்டு எண் - 58 க்குட்பட்ட ஆழ்குழாய் கிணறுகளை இயக்கி ஒருவருட காலத்திற்கு பராமரித்தல்பணி ந.க.எண்.- 1438 /2017/MD3(E) | 4.80 |
| 7 | 62 | வார்டு எண் - 62 க்குட்பட்ட ஆழ்குழாய் கிணறுகளை இயக்கி ஒருவருட காலத்திற்கு பராமரித்தல்பணி ந.க.எண்.- 1437/2017/MD3(E) | 5.00 |
| 8 | 62 | வார்டு எண் - 62 க்குட்பட்ட ஆழ்குழாய் கிணறுகளை இயக்கி ஒருவருட காலத்திற்கு பராமரித்தல் பணி ந.க.எண்.- 1436/2017/MD3(E) | 2.00 |
| 9 | 57 | வார்டு எண் -57 க்குட்பட்ட மசக்காளிபாளையம் நடுவீதி (மேற்கு)பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்து ஆழ்குழாய் பகிர்மான குழாய்கள் பதித்தல் பணி ந.க.எண்.- 1433/2017/MD3(E) | 2.95 |
| 10 | 57 | வார்டு எண் - 57 க்குட்பட்ட மசக்காளிபாளையம் பாலசுப்பிரமணியம் நகர் பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்து ஆழ்குழாய் பகிர்மான குழாய்கள் பதித்தல் பணி ந.க.எண்.- 1435/2017/MD3(E) | 3.55 |

| | | | |
|---|---|---|---|
| 11 | 57 | வார்டு எண் - 57 க்குட்பட்ட மசக்காளிபாளையம் முல்லைநகர் பகுதியில் ஆழ்குழாய் கிணறு அமைத்து ஆழ்குழாய் பகிர்மான குழாய்கள் பதித்தல் பணி<br>ந.க.எண்.- 1434/2017/MD3(E) | 3.55 |
| 12 | 56 | வார்டு எண் - 56 க்குட்பட்ட பகுதிகளில் மின்மோட்டார் வழங்குதல் மற்றும் பகிர்மான குழாய் அமைத்தல் பணி<br>ந.க.எண்.- 1444/2017/MD3(E) | 5.00 |

மேற்கண்ட பணிகளுக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்:- 1443 /2017/எம்டி3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 404 நாள் 23.02.2017</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 26

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வார்டு எண்.50 டாடாபாத் யார்டு சாலை மற்றும் 100 அடி சாலை சந்திப்பில் - தமிழ்நாடு மீன் வளர்ச்சிக்கழகத்திற்கு 25’ x 20’ அளவு கொண்ட இடம் - ஒதுக்கீடு செய்யப்பட்டு - மூன்று ஆண்டுகள் முடிவடைந்ததால் அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்து – உரிமம் புதுப்பித்தல் - தொடர்பாக

பார்வை :
1) அரசாணை எண். 147 ந.நி.ம.கு.வ.(நநி4) துறை நாள். 30.12.2000.
2) அரசாணை எண். 92 ந.நி.ம.கு.வ துறை நாள். 03.07.2007.
3) மாமன்ற தீர்மான எண்.251 நாள்.25.10.2012.

*********

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்ட வணிக வளாக கடைகளுக்கு பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட அரசாணைகளின்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீட்டித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை எண்.147-க்கு இணங்க மாமன்ற தீர்மான எண்.164 நாள் 28.10.2004-ன் படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. கடைகளின் உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.92–நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.07–ன் படி உரிமம் புதுப்பித்து 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்யவும் 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசாணையின் படி பொதுப்பணித்துறை வாடகை மதீப்பிடுகளின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை3-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின் படி கீழ் குறிப்பிட்ட காலி இடத்திற்கு 31.07.2015-யுடன் மூன்றாண்டுகள் முடிவடைந்ததால் 01.08.2015 முதல் 31.07.2018 வரை 15 சதவீதம் வாடகை உயர்வு செய்யப்பட வேண்டும்

<u>வார்டு – 50 - இடம் :டாடாபாத் யார்டு சாலை மற்றும் 100 அடி சாலை சந்திப்பில் காலி இடம்</u>

| வ. எண் | வரி விதிப்பு எண் | கடை எண் | பெயர் | காலி இடம் | மொத்த ச.அடி | மூன்றாண்டுகள் 31.07.2015-ல் முடிவடைகிறது - தற்போது செலுத்தி வரும் மாத வாடகை ரூ. | உரிமம் புதிப்பிக்கப்பட வேண்டி நாள். | | 01.04.2016 முதல் 15 சதவீதம் உயர்வு செய்யப்பட வேண்டிய மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | முதல் | முடிய | |
| 1 | 5040279 | 0 | வார்டு எண்.50 டாடாபாத் யார்டு சாலை மற்றும் 100 அடி சாலை சந்திப்பில் - தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகம் | 25x 20 | 500 | 7,926/- | 01.08.2015 | 31.07.2018 | 9,115/- |

எனவே அதன் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 50 டாடாபாத் யார்டு சாலை மற்றும் 100 அடி சாலை சந்திப்பில் தமிழ் நாடு மீன் வளர்ச்சிக்கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட காலி இடத்தின் உரிமத்திற்கு மூன்றாண்டுகள் முடிவடைந்ததால் 15 சதவீதம் உயர்வு செய்யப்பட்ட வாடகையினை நிர்ணயம் செய்யவும் மற்றும் வித்தியாச வாடகையினை வசூல் செய்யவும், இத்துடன் புதுப்பித்தல் கட்டணம், வைப்பு தொகை வித்தியாச தொகை, சேவை வரி, மின் கட்டணம் மற்றும் அவ்வப்பொழுது மத்திய மாநில அரசால் நிர்ணயம் செய்யப்படும் இதர வரிகளை செலுத்துவதற்கும் ஒப்புக்கொள்ளும் உரிமதாரர்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் உரிமம் புதுப்பித்து ஒப்படைக்கவும், ஒப்புக்கொள்ளாத உரிமதாரர்களின் உரிமத்தை ரத்துசெய்து மறு ஏலத்திற்கு கொண்டுவரவும், ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - மூன்றாண்டுகள் முடிவடைந்ததால் அரசாணைபடி 15 சதவீதம் வாடகை உயர்வு செய்ய அனுமதிக்கலாம்

ந.க. எண்.629/2017/அ2(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 405 நாள் 23.02.2017**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 27

| | |
|---|---|
| பொருள் : | கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வார்டு எண்.50 டாடாபாத் ராஜு ரோடு கிழக்கு மாநகராட்சி வணிக வளாக கடைகள் - ஒதுக்கீடு செய்யப்பட்டு - மூன்று ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்து – உரிமம் புதுப்பித்தல் - தொடர்பாக |
| பார்வை : | 1) அரசாணை எண். 147 ந.நி.ம.கு.வ.(நநி4) துறை நாள். 30.12.2000.<br>2) அரசாணை எண். 92 ந.நி.ம.கு.வ துறை நாள். 03.07.2007.<br>3) மாமன்ற தீர்மான316 நாள்.28.12.2012. |

*********

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்ட வணிக வளாக கடைகளுக்கு பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட அரசாணைகளின்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீட்டித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை எண்.147-க்கு இணங்க மாமன்ற தீர்மான எண்.164 நாள் 28.10.2004-ன் படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. கடைகளின் உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.92–நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.07–ன் படி உரிமம் புதுப்பித்து 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்யவும் 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசாணையின் படி பொதுப்பணித்துறை வாடகை மதீப்பிடுகளின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை3-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின் படி கீழ் குறிப்பிட்ட கடைகளுக்கு 31.03.2015-யுடன் மூன்றாண்டுகள் முடிவடைந்ததால் 01.04.2015 முதல் 31.03.2018 வரை 15 சதவீதம் வாடகை உயர்வு செய்யப்பட வேண்டும்.

வார்டு – 50 இடம் : டாடாபாத் ராஜு ரோடு கிழக்கு மாநகராட்சி வணிக வளாக கடைகள்

| வ. எண் | வரி விதிப்பு எண் | கடை எண் | பெயர் | கடையின் அளவு | மொத்த ச.அடி | 01.01.2013 அன்று பொது ஏலத்தில் புதியதாக ஒப்படைக்கப் பட்டு 31.03.2015-ல் முடிவடைகிறது - தற்போது செலுத்தி வரும் மாத வாடகை ரூ. | உரிமம் புதிப்பிக்கப்பட வேண்டிய நாள். | | 01.04.2015 முதல் 15 சதவீதம் உயர்வு செய்யப்பட வேண்டிய மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | முதல் | முடிய | |
| 1 | 5040033 | 3 | S.டேவிட் எங்கிள்பர்ட் | 22.96x 14.76 | 339.04 | 27,500/- | 01.04.2015 | 31.03.2018 | 31,625/- |
| 2 | 5040034 | 4 | S.டேவிட் எங்கிள்பர்ட் | 22.96x 14.76 | 339.04 | 27,700/- | 01.04.2015 | 31.03.2018 | 31,855/- |
| 3 | 5040035 | 5 | S.டேவிட் எங்கிள்பர்ட் | 22.96x 14.76 | 339.04 | 27,900/- | 01.04.2015 | 31.03.2018 | 32,085/- |

எனவே அதன் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 50 டாடாபாத் ராஜு ரோடு கிழக்கு உள்ள மூன்று (3) மாநகராட்சி வணிக வளாக கடைகள் மூன்றாண்டுகள் முடிவடைந்ததால் 15 சதவீதம் உயர்வு செய்யப்பட்ட வாடகையினை நிர்ணயம் செய்யவும் மற்றும் வித்தியாச வாடகையினை வசூல் செய்யவும், இத்துடன் புதுப்பித்தல் கட்டணம், வைப்பு தொகை வித்தியாச தொகை, சேவை வரி, மின் கட்டணம் மற்றும் அவ்வப்பொழுது மத்திய மாநில அரசால் நிர்ணயம் செய்யப்படும் இதர வரிகளை செலுத்துவதற்கும் ஒப்புக்கொள்ளும் உரிமதாரர்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் உரிமம் புதுப்பித்து ஒப்படைக்கவும், ஒப்புக்கொள்ளாத உரிமதாரர்களின் கடைகளின் உரிமத்தை ரத்துசெய்து மறு ஏலத்திற்கு கொண்டுவரவும், ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - மூன்றாண்டுகள் முடிவடைந்ததால் அரசாணைபடி 15 சதவீதம் வாடகை உயர்வு செய்ய அனுமதிக்கலாம்

ந.க. எண்.629/2017/அ2(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 406 நாள் 23.02.2017**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 28

| | |
|---|---|
| பொருள் : | கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வார்டு எண்.50 டாடாபாத் ராஜு ரோடு கிழக்கு மாநகராட்சி வணிக வளாக கடைகள் - ஒதுக்கீடு செய்யப்பட்டு - மூன்று ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்து – உரிமம் புதுப்பித்தல் - தொடர்பாக |
| பார்வை : | 1) அரசாணை எண். 147 ந.நி.ம.கு.வ.(நநி4) துறை நாள். 30.12.2000.<br>2) அரசாணை எண். 92 ந.நி.ம.கு.வ துறை நாள். 03.07.2007.<br>3) மாமன்ற தீர்மான398 நாள்.18.03.2013. |

*********

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்ட வணிக வளாக கடைகளுக்கு பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட அரசாணைகளின்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீட்டித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை எண்.147-க்கு இணங்க மாமன்ற தீர்மான எண்.164 நாள் 28.10.2004-ன் படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. கடைகளின் உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.92–நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.07–ன் படி உரிமம் புதுப்பித்து 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்யவும் 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசாணையின் படி பொதுப்பணித்துறை வாடகை மதீப்பிடுகளின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை3-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின் படி கீழ் குறிப்பிட்ட கடைக்கு 31.03.2016-யுடன் மூன்றாண்டுகள் முடிவடைந்ததால் 01.04.2016 முதல் 31.03.2019 வரை 15 சதவீதம் வாடகை உயர்வு செய்யப்பட வேண்டும்

வார்டு – 50 இடம் : டாடாபாத் ராஜு ரோடு கிழக்கு மாநகராட்சி வணிக வளாக கடைகள்

| வ. எண் | வரி விதிப்பு எண் | கடை எண் | பெயர் | குடை யின் அளவு | மொத்த ச.அடி | 01.04.2013 அன்று பொது ஏலத்தில் புதியதாக ஒப்படைக்கப் பட்டு 31.03.2016-ல் முடிவடைகிறது - தற்போது செலுத்தி வரும் மாத வாடகை ரூ. | உரிமம் புதிப்பிக்கப்பட வேண்டி நாள். | | 01.04.2016 முதல் 15 சதவீதம் உயர்வு செய்யப்பட வேண்டிய மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | முதல் | முடிய | |
| 1 | 5040032 | 1 | C.ரவிசந்திரன் | 22.96x 9.84 | 226.04 | 11,700/- | 01.04.2016 | 31.03.2019 | 13,455/- |

எனவே அதன் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 50 டாடாபாத் ராஜு ரோடு கிழக்கு உள்ள ஒரு கடைக்கு(1) மாநகராட்சி வணிக வளாக கடைகள் மூன்றாண்டுகள் முடிவடைந்ததால் 15 சதவீதம் உயர்வு செய்யப்பட்ட வாடகையினை நிர்ணயம் செய்யவும் மற்றும் வித்தியாச வாடகையினை வசூல் செய்யவும், இத்துடன் புதுப்பித்தல் கட்டணம், வைப்பு தொகை வித்தியாச தொகை, சேவை வரி, மின் கட்டணம் மற்றும் அவ்வப்பொழுது மத்திய மாநில அரசால் நிர்ணயம் செய்யப்படும் இதர வரிகளை செலுத்துவதற்கும் ஒப்புக்கொள்ளும் உரிமதாரர்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் உரிமம் புதுப்பித்து ஒப்படைக்கவும், ஒப்புக்கொள்ளாத உரிமதாரர்களின் கடைகளின் உரிமத்தை ரத்துசெய்து மறு ஏலத்திற்கு கொண்டுவரவும், ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி அவர்களின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - மூன்றாண்டுகள் முடிவடைந்ததால் அரசாணைபடி 15 சதவீதம் வாடகை உயர்வு செய்ய அனுமதிக்கலாம்

ந.க. எண்.629/2017/அ2(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 407 நாள் 23.02.2017**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 29

| | |
|---|---|
| பொருள் : | கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வார்டு எண்.50 அழகப்பா ரோடு மாநகராட்சி வணிக வளாக கடைகள் - ஒதுக்கீடு செய்யப்பட்டு - மூன்று ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்து – உரிமம் புதுப்பித்தல் - தொடர்பாக |
| பார்வை : | 1) அரசாணை எண். 147 ந.நி.ம.கு.வ.(நநி4) துறை நாள். 30.12.2000.<br>2) அரசாணை எண். 92 ந.நி.ம.கு.வ துறை நாள். 03.07.2007.<br>3) மாமன்ற தீர்மான320 நாள்.31.01.2013. |

*********

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்ட வணிக வளாக கடைகளுக்கு பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட அரசாணைகளின்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீட்டித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்திரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை அரசு ஆணை எண்.147-க்கு இணங்க மாமன்ற தீர்மான எண்.164 நாள் 28.10.2004-ன் படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது. கடைகளின் உரிமக்காலம் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்.92–நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.07–ன் படி உரிமம் புதுப்பித்து 15% உயர்வு செய்து மாத வாடகை நிர்ணயம் செய்யவும் 9 ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசாணையின் படி பொதுப்பணித்துறை வாடகை மதீப்பிடுகளின் அடிப்படையில் வாடகை நிர்ணயம் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பார்வை3-ல் காணும் மாமன்ற தீர்மானத்தின் படி கீழ் குறிப்பிட்ட கடைகளுக்கு 31.03.2016-யுடன் மூன்றாண்டுகள் முடிவடைந்ததால் 01.04.2016 முதல் 31.03.2019 வரை 15 சதவீதம் வாடகை உயர்வு செய்யப்பட வேண்டும்

வார்டு – 50 இடம் : அழகப்பா ரோடு மாநகராட்சி வணிக வளாக கடை

| வ. எண் | வரி விதிப்பு எண் | கடை எண் | பெயர் | குடை யின் அளவு | மொத்த ச.அடி | 01.01.2013 முதல் பொதுப் பணித்துறை மதிப்பீட்டின் படி உயர்வு செய்யப்பட்டு ரூ.32.29 /ச.அடி தற்போது செலுத்தி வரும் மாத வாடகை ரூ. | உரிமம் புதிப்பிக்கப்பட வேண்டி நாள். | | 01.04.2016 முதல் 15 சதவீதம் உயர்வு செய்யப்பட வேண்டிய மாத வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | முதல் | முடிய | |
| 1 | 40063 | 1 | சி. கந்தசாமி | 7x11.75 | 83 | 2680 | 01.04.2016 | 31.03.2019 | 3082 |
| 2 | 40064 | 2 | சி. கந்தசாமி | 7x11.75 | 83 | 2680 | 01.04.2016 | 31.03.2019 | 3082 |
| 3 | 40065 | 3 | சி. கந்தசாமி | 7x11.75 | 83 | 2680 | 01.04.2016 | 31.03.2019 | 3082 |

எனவே அதன் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 50 அழகப்பா ரோட்டில் உள்ள மூன்று (3) மாநகராட்சி வணிக வளாக கடைகள் மூன்றாண்டுகள் முடிவடைந்ததால் 15 சதவீதம் உயர்வு செய்யப்பட்ட வாடகையினை நிர்ணயம் செய்யவும் மற்றும் வித்தியாச வாடகையினை வசூல் செய்யவும், இத்துடன் புதுப்பித்தல் கட்டணம், வைப்பு தொகை வித்தியாச தொகை, சேவை வரி, மின் கட்டணம் மற்றும் அவ்வப்பொழுது மத்திய மாநில அரசால் நிர்ணயம் செய்யப்படும் இதர வரிகளை செலுத்துவதற்கும் ஒப்புக்கொள்ளும் உரிமதாரா்களுக்கு கடையினை புதிய வாடகை அடிப்படையில் உரிமம் புதுப்பித்து ஒப்படைக்கவும், ஒப்புக்கொள்ளாத உரிமதாரா்களின் கடைகளின் உரிமத்தை ரத்துசெய்து மறு ஏலத்திற்கு கொண்டுவரவும், ஆணையாளா் மற்றும் தனி அதிகாரி அவா்களின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு - மூன்றாண்டுகள் முடிவடைந்ததால் அரசாணைபடி 15 சதவீதம் வாடகை உயர்வு செய்ய அனுமதிக்கலாம்

ந.க. எண்.629/2017/அ2(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 408 நாள் 23.02.2017</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 30

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலம் - வார்டு எண்.51 சீனிவாசபுரம் தினசரி மாாக்கெட் காய்கறி கடைகள் - மாநகராட்சி வணிக வளாக கடைகள் - ஒதுக்கீடு செய்யப்பட்டு - மூன்று ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு அரசின் ஆணைப்படி வாடகையை உயர்வு செய்து – உரிமம் புதுப்பித்தல் - தொடர்பாக

பார்வை :
1) அரசாணை எண். 147 ந.நி.ம.கு.வ.(நநி4) துறை நாள். 30.12.2000.
2) அரசாணை எண். 92 ந.நி.ம.கு.வ துறை நாள். 03.07.2007.
3) மாமன்ற தீா்மான எண்.100 நாள்.24.07.2013.

